அ.வ.எண். 31/2016 நாள்: 13.03.2026

வா.சா.1 திருமதி. கண்ணகி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் எனது கணவருக்கு சொந்தமானது. அம்மனியம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 7 பேர் ஆவர். அவர்கள் 1.வைத்தியலிங்கம், 2. மருதையா, 3.நடராஜன், 4.தர்மராஜன், 5.கிட்டு, 6.குமரன், 7. சண்முகம் ஆவர். நான் வைத்தியலிங்கம் என்பவரின் மருமகள் என்றால் சரிதான். வழக்கு சொத்து என்ன வகைபாட்டை சார்ந்தது என்றால் மனை மற்றும் வீடு ஆகும். வழக்கு சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும், வடக்கில் 50–ம் நம்பர் ரோடு, தெற்கில் கொடிக்கால்கார தெரு, மேற்கில் சுந்தரமூர்த்தி வீடு, கிழக்கில் சரோஜா வீடு உள்ளது. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் கிழமேல் 8 அடி, தென்வடல் 55 அடி ஆகும். அம்மனியம்மாள் இறந்தபிறகு அவரது வாரிசுகள் சொத்தை பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/ Kannaki

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.13 18:08:39 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU